


# உள்ளாட்சி டுடே

தமிழ் வார இதழ்

ULLATCHI TODAY

WEEKLY

R.N.I. No. TN/TAM/2013/52170

வெளியீட்டாளர் &
ஆசிரியர் : R. ரவி




மலர் - 12 Volume - 12 • இதழ் - 52 Issue - 52 • 10 ஜூன் 2025 10 June 2025 • விலை : ரூ. 5.00 Rs. : 5.00

## பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டும் திமுக அரசின் திட்டங்கள்: தமிழக அரசு பெருமிதம்




திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு வரும் மாபெரும் திட்டங்களால் தமிழகம் அதிவேகமாக நகரமாயமாகி சிறந்த மாநிலமாக திகழ்வதாகவும், திமுக அரசின் திட்டங்கள் இதர மாநிலங்களுக்கு வழிகாட்டுவதாகவும் அமைந்துள்ளதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றபின் நிறைவேற்றி வரும் பல்வேறு திட்டங்கள் காரணமாக தமிழகம் விரைந்து நகரமயமாகி வருகிறது.

மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் ஆண்டுதோறும் ரூ.1,000 கோடி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ரூ.5,000 கோடி, நமக்கு நாமே திட்டத்தில் ரூ.582 கோடி, பொதுமக்கள் பங்களிப்பு ரூ.183.56 கோடியும் சேர்ந்து பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுகின்றன. நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் இதுவரை அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் 3 கட்டங்களில் ரூ.6,655.80 கோடியில் 446 பாதாள சாக்கடை திட்ட பணிகள், குடிநீர்ப் பணிகள், பூங்கா மேம்பாடு மற்றும் நீர்நிலைகள் புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்றுள்ளன.

சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் 11 மாநகராட்சிகள் ரூ.10,639.80 கோடியில் மேம்படுத்தப்பட்டுள்ளன. மாநகராட்சி நகராட்சிகளில் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியின்கீழ் 28 புதிய பேருந்து நிலையப் பணிகள் ரூ.968.08 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. 23 மாநகராட்சிகள் மற்றும் 112 நகராட்சிகளில் விடுபட்ட பகுதிகளில் 3 லட்சத்து 65,555 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் மற்றும் புதிதாக 1 லட்சத்து 11,327 எல்இடி தெரு விளக்குகளும் ரூ.577.28 கோடி மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 98 சதவீதப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிப் பகுதிகளில் ரூ.196.56 கோடி மதிப்பீட்டில் 100 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் கட்டுவதற்கு அனுமதித்து, முதற்கட்டமாக 71 நூலகம் மற்றும் அறிவுசார் மையங்கள் கட்டப்பட்டுள்ளன. மாநகராட்சிகளில் ரூ.102.30 கோடியில் 231 புதிய வகுப்பறைகளும், நகராட்சிகளில் ரூ.118.80 கோடியில் 281 புதிய வகுப்பறைகளும் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 176 பணிகள் முடிவடைந்துள்ளன. சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கு 109.094 கி.மீ. நீளத்துக்கு ரூ.270.83 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் முடிவடைந்துள்ளன.

மக்களுடன் முதல்வர் திட்டம் செயல்பட்டு, மாநகராட்சிகளில் 10,283 மனுக்களில் 99.97 சதவீதம், நகராட்சிகளில் 34,385 மனுக்களில் 99.91 சதவீதம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. முதல்வரின் முகவரி திட்டத்தின்கீழ் 98.3 சதவீத மனுக்களும் நகராட்சிகளில் 97.4 சதவீத மனுக்களுக்கும் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் 4 ஆண்டுகளில் பேரூராட்சிகளில் ரூ.1,570.84 கோடி மதிப்பீட்டில் 2,937 பணிகளும் ரூ.3057.74 கோடியிலும் 8,065 சாலைப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், ரூ.4,198.91 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு திட்டங்களுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கி பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுதவிர, ரூ.6829.26 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு தொடர் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் 4 மாநகராட்சிகள், 13 நகராட்சிகள், 49 பேரூராட்சிகள், 10,565 ஊரகக் குடியிருப்புகளுக்கான 71 குடிநீர்த் திட்டங்கள் நாளொன்றுக்கு 751.56 மில்லியன் லிட்டர் (எம்.எல்.டி) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் ரூ.9,011.45 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு வரும் இத்தகைய மாபெரும் திட்டங்களால் தமிழகம் அதிவேகமாக நகரமாயமாகி இந்தியாவில் சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது. திமுக அரசின் திட்டங்கள் இதர மாநிலங்களுக்கும் வழிகாட்டத்தக்கவையாக அமைந்துள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 200 தொகுதிகளில் வெற்றிபெறுவோம் என பகல் கனவு காண்கிறார் ஸ்டாலின்: இபிஎஸ் விமர்சனம்



தமிழகத்தில் வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றிபெறுவோம் என திமுக தலைவர் ஸ்டாலின் பகல் கனவு காண்கிறார் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறினார்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் எம்எல்ஏ சு.ரவியின் மகன் திருமண விழா தக்கோலத்தில் நேற்று நடைபெற்றது. இதில் பழனிசாமி பேசியதாவது:முக்கிய கட்சிகள் இணையும் அதிமுகவுடன் பல்வேறு கட்சிகள் கூட்டணியில் உள்ளன. விரைவில் முக்கிய கட்சிகள் இந்தக் கூட்டணியில் இணைய உள்ளன.

திமுக தலைவர் ஸ்டாலின் செல்லும் இடங்களில் எல்லாம், வரும் சட்டப்பேரவை தேர்தலில் 200 இடங்களில் திமுக கூட்டணி வெற்றிபெறும் என்று கூறிவருகிறார். அவர் பகல் கனவு காண்கிறார். மக்கள் ஆதரவுடன் வெற்றி பெற்று, அதிமுக மீண்டும் ஆட்சி அமைக்கும்.

தமிழகத்தில் கடந்த அதிமுக ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களை, திமுக அரசு முடக்கி உள்ளது. திமுக அரசு இதுவரை எந்த திட்டத்தையும் புதிதாக கொண்டுவரவில்லை. ஏற்கெனவே அதிமுக அறிவித்த திட்டங்களை ஸ்டிக்கர் ஒட்டி செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் ஊழலும், முறைகேடுகளும் அதிகரித்துள்ளன. 2026 சட்டப் பேரவைத் தேர்தலை மனதில் கொண்டு, அதிமுகவினர் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். முன்னாள் அமைச்சர்கள் கே.சி. வீரமணி, சி.வி.சண்முகம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## 2026 தேர்தலில் அதிமுகவின் வாக்கு வங்கி சரிந்துவிடும்: திருமாவளவன் கருத்து



தமிழகத்தில் முருகன் அவதாரத்தை எடுத்துள்ளது பாஜக. இதற்கு மக்கள் ஏமாறமாட்டார்கள், முருகனும் ஏமாறமாட்டார் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறினார்.

திண்டுக்கல்மாவட்டம்கொடைக்கானலில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: வக்பு திருத்த சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி விசிக சார்பில் திருச்சியில் வரும் 14-ம் தேதி பேரணி நடைபெறவுள்ளது. ஜனநாயகத்தைக் காப்பவர்களும், மதச்சார்பின்மையைப் பாதுகாப்பவர்களும் இந்தப் பேரணியில் பங்கேற்க வேண்டும்.

பாஜக ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வடிவம் எடுத்து வருகிறது. உத்தர பிரதேசம் போன்ற மாநிலங்களில் ராமர் வடிவம், மேற்கு வங்கத்தில் துர்கா தேவி, மத்திய இந்தியாவில் விநாயகர், தமிழகத்தில் முருகன் அவதாரத்தை எடுத்துள்ளது. வட மாநிலங்களில் பாஜக செய்யும் இதுபோன்ற அரசியல் தமிழகத்தில் எடுபடாது. முருகன் பெயரில் மாநாடு நடத்துவதும் இங்கு எடுபடாது. தமிழ் மக்களும் ஏமாறமாட்டார்கள், தமிழ் கடவுள் முருகனும் ஏமாறமாட்டார்.

வட மாநிலங்களில் நடைபெறும் தேர்தல் 'மேட்ச் பிக்ஸிங்'போல உள்ளது என்று ராகுல் காந்தி கூறியிருப்பது உண்மைதான். மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தை வைத்து பாஜக சூதாட்டம் நடத்தி வருகிறது. அனைவரும் இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துக்கு எதிராகப் போராடும் நிலை உருவாக வேண்டும். 2026 தேர்தலில் அதிமுகவின் வாக்கு வங்கி சரிந்துவிடும். பாஜக அவர்களுக்கு பலம் உள்ளது போன்று காட்டிக் கொள்வர். இவ்வாறு அவர் கூறினார்.

வலையில் சிக்கிய அதிமுக... சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கழனிவாசலில் கட்சி அலுவலகத்தை திருமாவளவன் திறந்து வைத்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, 'தமிழகத்தில் திமுகவுக்கு மாற்றாக எதிர்க்கட்சிகளின் கூட்டணி உருவாகவில்லை. அமித்ஷா தமிழகத்துக்கு அடுத்தடுத்து வந்து கூட்டணியை உருவாக்க முயற்சிக்கிறார். இப்போதைக்கு அதிமுக மட்டுமே பாஜக வலையில் சிக்கி உள்ளது. மற்ற கட்சிகள் உடன்படவில்லை. தமிழகத்தில் வெற்றி பெறும் வலுவான கூட்டணியாக திமுக கூட்டணி உள்ளது.

எங்களது நிலைப்பாடு கூட்டணி ஆட்சி என்பதுதான். அதற்கான சூழ்நிலை தற்போது தமிழகத்தில் ஏற்படவில்லை. அதற்காக, கூட்டணி ஆட்சி நிலைப்பாட்டை நாங்கள் கைவிடவும் இல்லை. நடைமுறைக்கு சாத்தியம் இல்லாத நிலையில் கூட்டணி ஆட்சி குறித்து வலியுறுத்த மாட்டோம்' என்றார்.

## பாஜகவுக்கு ஏற்பட்டுள்ள பதற்றமே அமித் ஷா அடிக்கடி தமிழகம் வர காரணம் : சேகர்பாபு



பதற்றம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாத ஒரு கூட்டணியாக திமுக கூட்டணி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. பதற்றம் பாஜக கூட்டணிக்கு இருப்பதால் தான் மத்திய அளவில் முக்கிய பதவியில் இருக்கின்ற அமித்ஷா போன்றவர்கள் கூட தமிழகத்துக்கு அவ்வப்போது வருகின்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

சென்னையில் சூளை பகுதியில் உள்ள அகண்ட தண்டு மாரியம்மன் கோயில் குடமுழுக்கு நன்னீராட்டு விழா இன்று (ஜூன் 8) நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்ட பின்னர் தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: திராவிட மாடல் ஆட்சிக்கு எவ்வித பதற்றமோ, பயமோ இல்லை. திராவிட மாடல் ஆட்சி நாயகன் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த கூட்டணி வலுவோடும் பொலிவோடும் தெளிவோடும் இருக்கின்றது. பதற்றம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாத ஒரு கூட்டணியாக இந்த கூட்டணி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பதற்றம் அவர்களிடத்தில் இருப்பதால்தான் மத்திய அளவில் முக்கிய பதவியில் இருக்கின்ற அமித் ஷா போன்றவர்கள் கூட தமிழகத்துக்கு அவ்வப்போது வருகின்ற ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. எங்கள் முதல்வரை பார்த்து தான் ஒன்றியமே இன்று பதற்றத்தோடு இருக்கிறது என்பதற்கு அமித் ஷாவின் வருகையே ஒரு எடுத்துக்காட்டாகும். திருப்பரங்குன்றத்தில் நடைபெற உள்ள முருகன் மாநாடு, அரசியல் கட்சி சார்ந்த ஒரு மாநாடு. இந்து சமய அறநிலையத்துறை நடத்திய மாநாடு தான் பக்தி மார்க்கமான மாநாடாகும். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் பணி ஒரு சவாலான பணி. ராஜகோபுரமே விரிசல் விட்டு இருக்கின்ற நிலை. அதை சரி செய்கின்ற பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இக்கோயிலில் ஆயிரம் கால் மண்டபம் 16 ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த நிலையில், இந்த ஆட்சி வந்த பிறகுதான் பக்தர்களின் பயன்பாட்டுக்காக கொண்டு வந்திருக்கின்றோம். திருக்கோயிலுக்கு ஓரிரு நாட்களில் நேரடியாக ஆய்வுக்கு செல்ல இருக்கின்றோம். அனைத்து திருப்பணிகளின் நிலையை ஆய்வு செய்த பிறகு குடமுழுக்கிற்கான தேதியை அறிவிப்போம். கடந்த கால எடப்பாடி பழனிசாமி தலைமையில் இருந்த திறனற்ற ஆட்சிக்கு ஒரு திட்டத்தை சாட்சியாக வைக்க வேண்டுமென்றால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் தான். திட்டமிடல் இல்லாததால் அந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை வடிவமைத்ததன் காரணமாக அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே அதை செப்பனிட முடியவில்லை.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அதில் மேற்கொண்ட பணிகளை பட்டியலிட்டால் காலமும் நேரமும் போதாது. கிளாம்பாக்கத்தில் மழை நீர் வடிகால்கள் கூட அமைக்கப்படவில்லை. கிளாம்பாக்கத்துக்கும் அந்த ரயில் நிலையத்துக்கும் நடைபாதை கூட அமைக்கப்படவில்லை. கிளாம்பாக்கத்தில் இருந்து வழி மார்க்கங்கள் கூட அமைக்கப்படவில்லை. பூங்காக்களை மேம்படுத்தவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் பூங்காவை உருவாக்கினோம் நீரூற்று பூங்காவை உருவாக்கினோம்.

இப்படி எந்த பணியும் திட்டமிடப்படாததால் அந்த பேருந்து நிலைய பணிகள் முடங்கி இருந்ததை சீர் செய்கின்ற நோக்கோடு தமிழக முதல்வரின் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் முழுமையாக மக்கள் பயன்பாட்டுக்கு வந்தது. சர்வதேச தரத்திற்கு இணையாக விமான நிலையங்களுக்கு இணையாக கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் தொடர் விடுமுறை காரணமாக இரவு நேரத்தில் பயணிகள் அதிகமாக கூடியதால் இரவு நேர பயணிகளுக்கு போதுமான பேருந்து இல்லாத நிலையில் அவர்கள் ஒரு தர்ணாவிலே ஈடுபட்ட சூழ்நிலை. அதையும் முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்றவுடன் தேவையான பேருந்துகளை ஏற்பாடு செய்து அந்தப் பயணிகளின் திட்டமிட்ட பயணத்தையும் நிறைவேற்றி இருக்கின்றோம்.

மேலும் இந்த ஆட்சியில் எந்த விதமான தவறும் இல்லை என்பதால் போக்குவரத்து துறை சார்பிலும் அரசின் சார்பிலும் அன்றைக்கு ஏற்பட்ட நிலையை விரிவாக எடுத்துச் சொல்லி இருக்கின்றோம். பக்ரீத் பண்டிகையை தொடர்ந்து இந்த விடுமுறை நாட்களில் அதிக அளவு பயணிகள் பயணங்கள் மேற்கொண்ட போதிலும் போதுமான அளவுக்கு பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இரவு நேரத்தில் கூட 200 நபர்களுக்கு பேருந்து இல்லை என்ற நிலையில் தான் இந்த பிரச்சினை நடந்தது. ஒரு மணி நேரத்திற்குள்ளாக அதையும் சரி செய்து அவர்களுடைய பயணத்தையும் இனிதாக்கிய அரசு இந்த அரசு. கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் வட சென்னை தென்சென்னை மக்களின் வரப்பிரசாதமாக இருக்கிறது என்பதை தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் இப்படிப்பட்ட சிறிய பிரச்சினையை கூட பெரிதாக்க முயற்சிக்கின்றார்கள், என்று அவர் கூறினார்.

# காட்டுமன்னார்கோவில் அருகே தொடர் திருட்டில் ஈடுபட்ட 3 பேர் கைது



கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அடுத்த வீராணந்தபுரம் மெயின் ரோட்டில் வசித்து வருபவர் கலியமூர்த்தி மனைவி கலைச்செல்வி (65). திருமணமாகி கணவர் இறந்த நிலையில் வீட்டில் தனியாக வசித்து வரும் இவருக்கு மகள் மற்றும் மகன் உள்ளனர். மகன் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார்.

இந்நிலையில் கடந்த 17ம் தேதி வீட்டை பூட்டிவிட்டு சிதம்பரம் அருகே உள்ள சாக்காங்குடியில் உள்ள மகள் வசந்தி(40) வீட்டிற்கு சென்றுள்ளார்.

மீண்டும் நேற்று கலைச்செல்வி, மகள் வசந்தி அவரது மகன் ராகுல் (24) ஆகியோர் வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். உள்ளே சென்று பார்த்தபோது வீட்டில் உள்ள பொருட்களை யாரோ திருடி சென்றது தெரியவந்தது.

இதுகுறித்து காட்டுமன்னார்கோவில் காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்ததன் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் வீட்டின் முன் இருந்த சிசிடிவி காட்சிகளை வைத்து ஆய்வு செய்தனர்.

இதில் வீட்டின் பூட்டை உடைத்து திருடி சென்றது பிரபல கொள்ளையர்களான காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள பல்வாய் கண்டன் கிராமத்தை சேர்ந்த மணவாளன் (25), அவரது கூட்டாளிகளான சப்பாணி குட்டையை சேர்ந்த மணிகண்டன் (25), பெரிய புங்கனேரியை சேர்ந்த அருண்குமார் (24) என்பது தெரியவந்தது.

மேலும் அவர்கள் மணவாளன் வீட்டில் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து காட்டுமன்னார்கோவில் காவல் ஆய்வாளர் ஆறுமுகம், உதவி ஆய்வாளர் அன்பழகன் ஆகியோர் தலைமையிலான சிறப்பு பிரிவு போலீசார் மூன்று பேரையும் சுற்றிவளைத்து கைது செய்து விசாரித்தில் பல்வேறு பகுதிகளில் திருட்டு, அடிதடி, வழிப்பறி உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதும் தெரியவந்தது.

மேலும் அவர்களிடம் இருந்து திருட்டுக்கு பயன்படுத்திய இரண்டு பைக்குகள், வெள்ளி, பித்தளை பொருட்கள், லேப்டாப், தையல் இயந்திரம் உள்ளிட்ட பொருட்களை பறிமுதல் செய்தனர்.

இதனையடுத்து கலைச்செல்வியின் பேரன் ராகுல் கொடுத்த புகாரின் பேரில் அவர்கள் மீது மூன்று பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்தனர். பிரபல கொள்ளையர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பெற்ற தாயை காலால் நெஞ்சில் எட்டி உதைத்து கொன்ற மகன்: தூக்கில் தொங்க விட்டு தற்கொலை நாடகம்



பெற்ற தாயை காலால் நெஞ்சில் எட்டி உதைத்து கொன்று தூக்கில் தொங்கவிட்டு தற்கொலை நாடகமாடிய மகனை போலீசா கைது செய்தனர். கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை அருகே பெட்டமுகிலாளம் ஊராட்சி, ஜெயபுரம் புதூர் கிராமத்தில் வசிப்பவர் அய்யாதுரை, கூலி தொழிலாளி. இவருக்கு பூபதி (65) என்ற மனைவியும், 4 மகன்களும் உள்ளனர். மகன்கள் திருமணம் ஆகி தனி தனியாக வசித்து வருகின்றனர். கடைசி மகன் பரமசிவனுக்கு (32) லட்சுமி என்ற மனைவியும், 2 குழந்தைகளும் உள்ளனர். குடும்ப தகராறு காரணமாக, பரமசிவனை பிரிந்த லட்சுமி, கடந்த 6 ஆண்டுகளாக குழந்தைகளுடன் பைரமங்கலத்தில் உள்ள தாய் வீட்டில் வசித்து வருகிறார். பரமசிவன் தந்தை வீட்டில் தங்கி, கூலி வேலை செய்து வருகிறார். குடிப்பழக்கம் உள்ள பரமசிவன், என் வாழ்க்கை கெட்டு போனதற்கு நீ தான் காரணம் என கூறி தாய் பூபதியிடம் தகராறு செய்து வந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு, போதையில் வீட்டிற்கு வந்த பரமசிவன், மேலும் குடிப்பதற்கு பணம் கேட்டு தாய் பூபதியிடம் தகராறு செய்துள்ளார். அப்போது, அவரை சமாதானம் செய்வதற்காக, அய்யாதுரை கிராமத்தில் உள்ள பெரியவர்களை அழைத்து வர சென்றுள்ளார். சிறிது நேரம் கழித்து வந்து பார்த்த போது, பூபதி தூக்கில் தொங்கியவாறு அமர்ந்த நிலையில் இறந்து கிடந்தார். தகவலின் பேரில் தேன்கனிக்கோட்டை போலீசார் வந்து பூபதியின் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர், காட்டில் பதுங்கியிருந்த பரமசிவனை நேற்று காலை போலீசார் பிடித்து விசாரித்தனர். அப்போது, பணம் தர மறுத்ததால் தாயை காலால் நெஞ்சில் எட்டி உதைத்ததில், கீழே விழுந்து இறந்து விட்டார். இதனால் பயந்துபோய் தற்கொலை செய்து கொண்டது போல் தூக்கில் தொங்க விட்டதாக அவர் போலீசில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதனை தொடர்ந்து, பரமசிவனை போலீசார் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

## பல்லாவரம் அருகே சிறுமி பாலியல் பலாத்கார வழக்கு: போலீஸ் காவலில் விசாரணை முடிந்து 5 பேர் மீண்டும் சிறையில் அடைப்பு: சிறுவர் சீர்திருத்த பள்ளியில் 7 பேர் அடைப்பு

பல்லாவரம் அருகே சிறுமியை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் சிறுவர்கள் உள்பட 12 பேரை கைது செய்தனர். இதில் 5 பேரை காவலில் எடுத்து, காஞ்சிபுரம் எஸ்பி தலைமையில் போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். பல்லாவரம் அருகே பொழிச்சலூர் பகுதியை சேர்ந்த 13 வயது சிறுமி, தனது பெற்றோருடன் வசித்து வருகிறார்.

இச்சிறுமியின் பெற்றோர் தினமும் காலையில் வேலைக்கு சென்று விடுவார்கள். சிறுமி மட்டும் வீட்டில் தனியாக இருப்பார். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தண்ணீர் கேன் போட வந்தவர், சிறுமியை காதலிப்பது போல் நடித்து பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். பிறகு, தனது நண்பர்களான 7 சிறுவர்கள் மற்றும் 5 வாலிபர்களுடன் சேர்ந்து சிறுமியை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.

ஒரு கட்டத்தில் சிறுமி, மனதளவில் கடுமையாக பாதிக்கப்பட்டு மனநோயாளி போல் ஆகிவிட்டார். இதனால் சிறுமியை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக தாயார் அழைத்து சென்றார். அங்கு பரிசோதித்த டாக்டர்கள், சிறுமி கர்ப்பமாக இருப்பதை தெரிவித்தனர். இதனால் அதிர்ச்சியடைந்த சிறுமியின் தாய், இதுபற்றி பல்லாவரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

போலீசார் வழக்குப்பதிவு செய்து, சிறுமியை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்த 7 சிறுவர்கள் மற்றும் கிழக்கு தாம்பரத்தை சேர்ந்த நந்தகுமார் (19), சஞ்சய் (19), எஸ்.சஞ்சய் (18), முடிச்சூரை சேர்ந்த சூர்யா (22), பல்லாவரத்தை சேர்ந்த நிக்சன் (22) உள்பட 12 பேரை கைது செய்தனர். அவர்கள் மீது போக்சோ உள்பட பல்வேறு குற்ற பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிவு செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். செங்கல்பட்டு சிறுவர் சீர்திருத்த பள்ளியில் 7 சிறுவர்களை அடைத்தனர்.

இவ்வழக்கு தொடர்பாக கடந்த சில நாட்களுக்கு முன் சஞ்சய், சூர்யா, நந்தகுமார், நிக்சன், எஸ்.சஞ்சய் ஆகிய 5 பேரையும் விசாரணைக்காக போலீசார் காவலில் எடுத்தனர்.



தொடர்ந்து, தாம்பரம் மாநகர காவல் ஆணையரகத்தில் வைத்து விசாரிக்காமல், காஞ்சிபுரம் ஐஜி மேற்பார்வையில், மாவட்ட எஸ்பி மற்றும் திருவள்ளூர் மாவட்ட டிஎஸ்பி தலைமையில் தீவிரமாக விசாரித்தனர். பின்னர் நேற்று மாலை போலீஸ் காவலில் விசாரணை முடிந்து 5 பேரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி மீண்டும் சிறையில் அடைத்தனர்.

இதற்கிடையே 5 பேரும் போலீஸ் காவலில் எடுக்கப்பட்டபோது, இன்ப சுற்றுலாவுக்கு செல்வது போல் ஜாலியாக சிரித்தபடி விசாரணைக்கு வந்ததை பார்த்து அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். இதுபோன்று சிறுமிகள் மற்றும் பெண்களிடம் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடும் நபர்களுக்கு நீதிமன்றம் பாரபட்சமின்றி மிக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

# விழுப்புரத்தில் திடீர் சோதனை: திருப்பதி-ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ரயிலில் 10 கிலோ கஞ்சா சிக்கியது



விழுப்புரம் ரயில் நிலையத்தில் மேற்கொண்ட சோதனையில் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ரயிலில் 10 கிலோ கஞ்சா கடத்தி வந்தது தெரியவந்தது. இதுகுறித்து போதை பொருள் நுண்ணறிவு பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விழுப்புரம் ரயில் நிலையத்தில் வெளி மாநிலங்களில் இருந்து வரும் ரயில்களில் இருப்புப்பாதை காவல் நிலைய போலீசார் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி நேற்று மாலை திருப்பதியில் இருந்து ராமேஸ்வரம் செல்லும் எக்ஸ்பிரஸ் ரயில் 3வது நடை மேடைக்கு வந்தது. அப்போது எஸ்ஐ முத்து செல்வம் தலைமையிலான போலீசார் ரயிலின் பின்பக்க பொது பெட்டியில் சோதனை செய்தனர்.

அதில் கழிவறை அருகே கேட்பாரற்று கிடந்த பேக்கை திறந்து பார்த்தபோது காக்கிநிற செலோட்டேப் சுற்றப்பட்ட 3 பார்சல் இருந்தது. அதனை பிரித்து சோதனை நடத்தியபோது 10 கிலோ கஞ்சா இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

அதனை பறிமுதல் செய்த போலீசார், கடத்தி வந்தவர்கள் யார்? என்பது குறித்தும் விசாரணை நடத்தினர். தொடர்ந்து பறிமுதல் செய்த கஞ்சாவை விழுப்புரம் போதை பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் துறையிடம் ஒப்படைத்தனர். அவர்கள் வழக்குப்பதிவு செய்து ரயிலில் கஞ்சாவை யார் கடத்தி வந்தது? என்பது குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பாலியல் பலாத்காரத்திற்கு ஆளான 9 வயது சிறுமியின் சடலம் சூட்கேசில் மீட்பு: டெல்லியில் கொடூரம்




தலைநகர் டெல்லியின் வடகிழக்கு நேரு விஹார் பகுதியில், 9 வயது சிறுமி ஒருவர் சூட்கேஸில் அடைக்கப்பட்ட நிலையில் போலீசார் சடலமாக மீட்டனர். இந்த சம்பவம் குறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், 'கடந்த சில தினங்களுக்கு முன் நேரு விஹார் பகுதியை சேர்ந்த 9 வயது சிறுமி ஒருவர் தனது உறவினர் ஒருவரைப் பார்க்கச் செல்வதாகக் கூறிவிட்டு வீட்டிலிருந்து புறப்பட்டுள்ளார். ஆனால், இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகியும் அவர் வீடு திரும்பாததால், அவரது தந்தை தேடத் தொடங்கியுள்ளார்.

அப்போது, சிறுமி தங்கள் வீட்டிலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் உள்ள ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பை நோக்கிச் சென்றதாக ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார். உடனடியாக அங்கு சென்ற தந்தை, இரண்டாவது தளத்தில் உள்ள ஒரு வீடு வெளிப்புறமாகப் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டு, பூட்டை உடைத்து உள்ளே சென்று பார்த்துள்ளார்.

அங்கு, ஒரு சூட்கேஸிற்குள் தனது மகள் நிர்வாண நிலையில், அசைவற்று கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அவர் மகளை உடனடியாக மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றார். ஆனால், சிறுமி ஏற்கெனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்தக் கொடூர சம்பவம் குறித்து தயாள்பூர் காவல் நிலையத்திற்கு அன்றிரவு தகவல் கிடைத்ததும், சம்பவ இடத்திற்கு போலீசார் விரைந்தனர். சிறுமியைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவரது முகத்தில் காயங்கள் இருப்பதைக் கண்டறிந்ததோடு, அவர் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து, பிஎன்எஸ் சட்டம் மற்றும் போக்சோ சட்டத்தின் கீழ் காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. குற்றவாளியைக் கண்டறியவும், ஆதாரங்களைத் திரட்டவும் பல தனிப் படைகள் அமைக்கப்பட்டு, தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சென்னை மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் பணி வாங்கி தருவதாக எம்பிஏ பட்டதாரியிடம் ரூ.26 லட்சம் மோசடி செய்தவர் கைது:தோழி உள்பட இரண்டு பெண்களும் சிக்கினர்



சென்னை மேடவாக்கம் பகுதியை சேர்ந்தவர் ராம சுப்பிரமணியன். இவர் ஓஎன்ஜிசி நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது மகன் வெங்கடாசலம் (எ) வெங்கடேஷ். எம்பிஏ பட்டதாரி. இவருக்கு அரசு வேலை வாங்கி கொடுக்க வேண்டும் என்று தனக்கு தெரிந்தவர்களிடம் கூறி வந்துள்ளார். அதன்படி தனது வீட்டின் அருகே வசிக்கும் பாஜ பிரமுகர் லதா என்பவரிடம் ராமசுப்பிரமணியன் தனது மகனின் வேலைக்கு சொல்லி வைத்திருந்தார். அதன்படி, லதா கடந்த 2023ம் ஆண்டு சென்னை மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் பணி காலியாக இருப்பதாகவும், அந்த பணிக்கு உங்கள் மகனை சேர்க்கலாம். அதற்காக நீங்கள் சிந்தாதிரிப்பேட்டையில் பாஜ பிரமுகர் ஜெயச்சந்திரன் என்பவரை சந்தித்து பேசுங்கள் என்று அவரிடம் கூறியுள்ளார். அவர் பாஜ பிரமுகரான ஜெயச்சந்திரனை நேரில் சந்தித்து பேசியுள்ளார். அப்போது ரூ.26 லட்சம் கொடுத்தால் மாநகராட்சியின் துப்புரவு ஆய்வாளர் பணி வாங்கி தருவதாக உறுதி அளித்துள்ளார்.

பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு தனது மகன் வெங்கடேஷுடன் ராமசுப்பிரமணியன் கடந்த 2023ம் ஆண்டு பாஜ பிரமுகர் ஜெயச்சந்திரனை சந்திக்க ரிப்பன் மாளிகைக்கு வந்துள்ளார். ஜெயச்சந்திரன் மாநகராட்சி அதிகாரி என ஜோஷிதா என்பவரை அறிமுகம் செய்து வைத்துள்ளார். பிறகு அரசு முத்திரையிடப்பட்ட கவரில் மாநகராட்சியின் துப்புரவு ஆய்வாளர் பணிக்கான பணி நியமன ஆணையை இருவரும் ராமசுப்பிரமணியிடம் வழங்கி உள்ளர். இதை பிரித்து பார்த்த போது, மாநகராட்சி ஆணையரின் கையெழுத்து போடப்பட்ட பணி நியமன ஆணை இருந்தது. பிறகு செ?ன்னபடி ரூ.26 லட்சத்தை பாஜ பிரமுகர் ஜெயச்சந்திரன் மற்றும் ஜோஷிதாவிடம் வழங்கினர். மேலும், வெங்கடேஷுக்கு தேனாம்பேட்டை மண்டலத்தில் துப்புரவு ஆய்வாளராகவும், மாதம் ரூ40 ஆயிரம் ஊதியம் வழங்கப்படும் என்றும் பணி நியமன ஆணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதோடு இல்லாமல் ஜோஷிதா தினமும் மயிலாப்பூர், மந்தைவெளி பகுதியில் குப்பை சரியாக அள்ளப்பட்டுள்ளதா என்று தினமும் போட்டோ எடுத்து வாட்ஸ் அப் மூலம் தனக்கு அனுப்ப வேண்டும் என்று கூறியுள்ளார்.

அதன்படி ஜோஷிதாவுக்கு தினமும் வெங்கடேஷ் போட்டோ எடுத்து அனுப்பி வந்துள்ளார். அதன்படி, கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அவருக்கு ரூ.40 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை ஊதியம் ஜோஷிதா மூலம் ரொக்கமாக பணம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த சில நாட்களுக்கு முன்பு ரூ.14 லட்சம் மதிப்புள்ள காசோலையை வெங்கடேஷிடம் ஜோஷிதா கொடுத்து, இதை மாநகராட்சி கருவூலத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று கூறி கொடுத்துள்ளார். அந்த காசோலையை வெங்கடேஷ் தவறவிட்டுவிட்டார். இதுகுறித்து ஜோஷிதாவிடம் வெங்கடேஷ் கூறியுள்ளார். ஆனால், இது சென்னை மாநகராட்சி பணம். அதை கட்டாயம் கட்ட வேண்டும். இல்லை என்றால் வேலையில் இருந்து நீக்கி விடுவோம் என்று மிரட்டியுள்ளார்.

அங்கு மாநகராட்சி வளாகத்தில் ஆட்டோவில் அமர்ந்தபடி வெங்கடேஷ் மற்றும் அவரது தந்தை ராமசுப்பிரமணியனிடம் பணம் கேட்டு மிரட்டியுள்ளர். மேலும், வெங்கடேஜுக்கு உதவி ஆணையர் பணி உயர்வு வழங்குவதாகவும் அதற்கு மேலும் ரூ.10 லட்சம் பணம் தர வேண்டும் என்றும் கேட்டுள்ளனர். இதனால் சந்தேகமடைந்த ராமசுப்பிரமணியன் தனக்கு தெரிந்த நபர்கள் மூலம் ஜோஷிதா மற்றும் ஜெயச்சந்திரன் ஆகியோர் கொடுத்த உதவி ஆணையருக்கான பணி நியமன ஆணையை மாநகராட்சியில் உள்ள அதிகாரிகளிடம் காட்டிய போது, அது போலியான பணி நியமன ஆணை என்பது தெரியவந்தது. மேலும், பணி நியமன ஆணையை வழங்கிய ஜோஷிதா மாநகராட்சியில் வேலை செய்யவில்லை என்றும் தெரிந்தது. வெங்கடேஷ் கொடுத்த பணத்தில் இருந்தே அவருக்கு ஊதியமாக கொடுத்து ஏமாற்றி வந்ததும் தெரியவந்தது.

போலீஸ் விசாரணையில், பாஜ பிரமுகரான ஜெயச்சந்திரன் தனது தோழியான ஜோஷிதாவுடன் சேர்ந்து ஜெராக்ஸ் கடை நடத்தி வரும் ரேவதி என்பவர் மூலம் போலியான பணி நியமன ஆணைகள் மற்றும் மாநகராட்சி ஆணையர் போன்று போலியான கையெழுத்து, மாநகராட்சி முத்திரை தயாரித்து மோசடி செய்தது தெரியவந்தது. இதுபோல, கடந்த 3 ஆண்டுகளில் 23 பேரிடம் ரூ.1.35 கோடி பணம் பெற்றுக்கொண்டு போலி பணி நியமன ஆணைகள் வழங்கி மோசடி செய்தது தெரிய வந்தது. இவர்களிடம் இருந்து 29 கிராம் தங்க நகையும் பறிமுதல் செய்யப்பட்டது. இதற்காக ஆட்களை மேடவாக்கம் பகுதியை சேர்ந்த பாஜ பிரமுகர் லதா மற்றும் கவுரி ஆகியோர் ஈடுபட்டது தெரியவந்தது. அதைதொடர்ந்து போலீசார் ?நற்று முன்தினம் அதிரடியாக சிந்தாதிரிப்பேட்டையை சேர்ந்த பாஜ பிரமுகர் ஜெயச்சந்திரன் (42), அவரது தோழி ஜோஷிதா (28), ஜெராக்ஸ் கடை உரிமையாளர் ரேவதி (45) ஆகியோரை கைது செய்தனர். இந்த வழக்கில் ஆட்களை பிடித்து கொடுத்து தலைமறைவாக உள்ள பாஜ பிரமுகர்களான லதா மற்றும் கவுரியை போலீசார் தேடி வருகின்றனர்.

## சென்னை மற்றும் புறநகரில் கைவரிசை காட்டிய உத்தரபிரதேசத்தை சேர்ந்த ஏடிஎம் கொள்ளை கும்பல் கைது



திருவான்மியூர் திருவள்ளுவர் நகரில் எஸ்பிஐ வங்கி ஏடிஎம் மையத்தில், வாடிக்கையாளர்கள் பணம் எடுக்க முயன்றபோது, மிஷினில் இருந்து பணம் வர வில்லை. ஆனால், பணம் எடுக் கப்பட்டதாக எஸ்எம்எஸ் மட்டும் வந்துள்ளது. இதுகுறித்து வாடிக்கையாளர்கள் வங்கி நிர்வாகத்தில் புகார் அளித்தனர். இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த வங்கி மேலாளர் நரேன் குமார், ஏடிஎம் மிஷினை சோதனை செய்தபோது, பணம் வெளியே வரும் இடத்தில் கருப்பு நிற அட்டையை வைத்து வெளியே பணம் வராமல் தடுத்து வைத்திருந்தது தெரியவந்தது.

இதையடுத்து, கண்காணிப்பு கேமராவை ஆய்வு செய்தபோது 2 மர்ம நபர்கள், கள்ளச்சாவி மூலம் ஏடிஎம் மிஷினை திறந்து, பணம் வரும் இடத்தில் கருப்பு நிற அட் டையை வைத்ததும், வாடிக்கை யாளர்கள் இந்த மிஷினில் பணம் எடுக்க முயன்று, பணம் வராமல் சென்றவுடன், சிறிது நேரத்தில் அந்த மர்ம நபர்கள் வந்து, அந்த கருப்பு அட்டையில் சிக்கிய வாடிக்கையாளரின் பணத்தை எடுத்து செல்வது தெரிந்தது.

இதுகுறித்து நரேன்குமார் திரு வான்மியூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். அதில், உத்தரபிரதேசத்தை சேர்ந்த குல்தீப் சிங் (26), பிரிட்ஜ் பான் (30), சுமித் யாதவ் (33) ஆகிய 3 பேர் இந்த சம்பவத்தில் ஈடுபட் டது தெரியவந்தது. இதனை யடுத்து தனிப்படை போலீசார், அந்த 3 பேரையும் நேற்று கைது செய்து விசாரணை நடத்தினர். அதில், இவர்கள் 3 பேரும் சேர்ந்து ஏடிஎம் மிஷினை கள்ளச்சாவி மூலம் திறந்து, பணம் வரக்கூடிய இடத்தில் ஒரு கருப்பு நிற அட் டையை வைத்து விட்டு சென் றதும், பின்னர், வாடிக்கையாளர் கள் பணம் எடுக்க முயன்றபோது பணம் வெளியில் வரமால் இந்த கருப்பு அடைக்குள் சிக்கியதும், பின்னர் இவர்கள் வந்து அந்த பணத்தை எடுத்து சென்றதும் தெரியவந்தது.

மேலும் விசாரணையில், கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சனி மற்றும் ஞாயிறு ஆகிய 2 நாட் களில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இதுபோன்ற கொள்ளை சம்பவத்தில் அதிகளவில் ஈடு பட்டு, உடனடியாக வாடகை கார்களில் ரயில் நிலையம் சென்று சொந்த ஊர்களுக்கு தப்பிச் சென் றதும் தெரியவந்தது. இதை யடுதது, மூவரையும் சைதாப் பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி புழல் சிறையில் அடைத் தனர். அவர்களிடமிருந்து கள்ளச் சாவி, கருப்பு நிற ஸ்டிக்கர் உள் ளிட்டவை பறிமுதல் செய்யப் பட்டன.

## ஆன்லைனில் முன்பதிவு செய்து இளைஞர்கள், இளம்பெண்கள் குவிந்தனர்: தென்னந்தோப்பில் நடந்த இரவு விருந்தில் அரைகுறை ஆடைகளுடன் குத்தாட்டம்: போதை பொருட்கள் சப்ளை செய்த 3 பேர் கைது

ஒசூர் அருகே பேரிகை பக்கம் உள்ள தென்னந்தோப்பில் நடந்த இரவு போதை விருந்து நடன நிகழ்ச்சியில் அரைகுறை ஆடை களுடன் இளம்பெண்கள், வாலி பர்கள் குத்தாட்டம் போட்டனர். அவர்களை போலீசார் எச்சரித்து அனுப்பினர். இரவு விருந்துக்கு போதைப்பொருட்கள் சப்ளை செய்த 3 பேரை போலீசார் கைது செய்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே தமிழக -கர்நாடக எல்லை யான கக்கனூர் சோதனைச் சாவடியில் கடந்த 24ம் தேதி இரவு போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அந்த வழியாக கர்நாடகா விலிருந்து, தமிழகத்திற்குள் நுழைந்த காரை நிறுத்தினர். ஆனால், அந்த கார் நிற்காமல் மின்னல் வேகத்தில் சென்றது. இதையடுத்து, போலீசார் காரை துரத்திச் சென்றனர். அப்போது, அந்த கார் பேரிகை அருகே முதுகுருக்கி கிராமத்தில் உள்ள தென்னந்தோப்பிற்குள் புகுந்தது.

போலீசார் பின்தொடர்ந்து சென்று அங்கு பார்த்தபோது,



டிஜே சவுண்டுடன் இரவு நடன நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டி ருந்தது. வெளி மாநிலத்தைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண் கள் ஏராளமானோர் அரை நிர் வாண ஆடைகளுடன் போதை யில் நடனமாடிக்கொண்டிருந்த னர். போலீசார் வந்ததை கூட அறியாமல் குத்தாட்டம் பே?ட்டுக் கொண்டிருந்தனர். போலீசார் அவர்களை சுற்றி வளைத்தனர். தொடர்ந்து தன்னிலை மறந்து நடனமாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களை பிடித்து விசாரித்தனர். பின்னர், எச்சரிக்கை செய்து அவர் களை அனுப்பி வைத்தனர். மேலும், அங்கு நடத்திய சோத னையில் போதை மத்திரைகள், விலை உயர்ந்த வெளிநாட்டு மதுபானங்கள், கஞ்சா மற்றும் போதை பொருட்கள் இருப்பதை கண்டுபிடித்து அவற்றை பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக காரில் தப்பி வந்த பெங்களூருவைச் சேர்ந்த பாலாஜி (36), பீகாரைச் சேர்ந்த ரஜினீஸ்குமார் (42), கோவாவைச் சேர்ந்த இக்னேஸஸ் லாரன்ஸ் காமி லோ (47) ஆகிய 3 பேரை பிடித்து காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்தனர்.

அப்போது, அப்பகுதியில் விவ சாயி ஒருவருக்கு சொந்தமான 4 ஏக்கர் தென்னந்தோப்பை பெங் களூரு கோரமங்கலத்தைச் சேர்ந்த பாலாஜி என்பவர் ஆண்டுக்கு ரூ.2 லட்சத்திற்கு குத்தகை எடுத்து, இக்னேஸஸ் லாரன்ஸ் காமி லோவுடன் சேர்ந்து பண்ணை வீடு அமைத்து இரவு விருந்து நடத்தி வந்தது தெரிய வந்தது.

ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்பவர்களுக்கு இரவு மது போதை விருந்துடன் நடன நிகழ்சிகள் நடத்தப்படுவதும் தெரிய வந்தது.

இதையடுத்து, போதை பொருட்கள் சப்ளை செய்ததாக பாலாஜி உள்பட 3 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

## பயங்கர கோஷம்: சினிமாவை விஞ்சும் சேசிங்: கோயம்பேடு மேம்பாலத்தில் மீண்டும் பைக் ரேசில் ஈடுபடும் இளைஞர்கள்: ரீல்ஸ் வைரல்; 2 சிறுவர்கள் சிக்கினர்

சென்னையில் நள்ளிரவில் நடைபெறும் பைக் ரேஸ் தடுக்க போக்குவரத்து போலீசார் பல் வேறு நடவடிக்கை எடுத்து வரு கின்றனர். இதன்காரணமாக பைக் ரேஸ் குறைந்துள்ள நிலையில், சில இடங்களில் மீண்டும் பைக் ரேஸ் தலைதூக்கி வருகிறது. கோயம் பேடு பகுதியில் சமீபகாலமாக பைக் ரேசில் இளைஞர்கள் அதிக மாக ஈடுபட்டு வருகின்றனர். அவர் களை போக்குவரத்து போலீசார் கண்காணித்து வருகின்றனர். கோயம்பேடு மேம்பாலம் உள்பட பல பகுதிகளில் நள்ளிரவில் பைக் ரேஸ் நடப்பதாக மக்கள் புகார் தெரிவித்து வந்தனர். இதன் காரணமாக கோயம்பேடு, திரு மங்கலம் மற்றும் வில்லிவாக்கம் மேம்பாலங்கள் இரவு நேரத்தில் இரும்பு தடுப்பு வைத்து மூடப் பட்டு வருகிறது. அத்துடன் வாகன சோதனையையும் தீவிரப்படுத்தி வந்ததால் இரவு நேரங்களில் பைக் ரேசை கட்டுப்படுத்த முடிந்தது.

இந்தநிலையில், போலீசாரின் கட்டுப்பாட்டை மீறி நேற்று முன்தினம் நள்ளிரவு கோயம்பேடு மேம்பாலத்தில் உள்ள இரும்பு தடுப்பை மீறி ஏராளமான இளை ஞர்கள் பைக் ரேசில் ஈடுபட்டனர். அவர்கள் ஏராளமான பைக்குகளில் சாலையில் படுவேகத்துடன் வரி சையாக கூச்சலிட்டப்படி சென்ற னர். அவற்றை வீடியோ எடுத்து இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் வெளி யிட்டு வருகின்றனர். அதில், ''அடுத்த வாரம் பைக் ரேஸ் பந்தயம் 20 ஆயிரம்' என்று பதிவு செய்து வெளியிட்டுள்ளனர். இந்த காட்சிகள் அனைத்தும் சமூகவலை தள பக்கத்தில் வைரலானதால் போலீசார் கண்காணிப்பில் ஈடு பட்டு வந்தனர். இதன் தொடர்ச் சியாக நேற்று நள்ளிரவில், கோயம் பேடு, அண்ணாநகர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் போலீசார் வாகன சோதனையை தீவிரப்படுத்தினர்.

அந்த சமயத்தில் அண்ணாநகர் வழியாக ரேஸ் பைக்கில் வந்த 2 பேர், போலீசாரை கண்டதும் தப்பிக்க முயன்றபோது போலீசார் விரட்டிச்சென்று இருவரை பிடித்து விசாரித்தபோது, அம்பத் தூர் பகுதியை சேர்ந்த 18 வயது சிறுவர்கள் என்பது தெரிந்தது. இவர்களிடம் இருந்து ரேஸ் பைக்கை பறிமுதல் செய்தனர். இதுகுறித்து சமூகநல ஆர்வலர்கள்



கூறியதாவது;

கோயம்பேடு மேம்பாலத்தின் மீது இளைஞர்கள் பைக் ரேஸ் நடத்துவது தொடர்ந்து அதிகரித்து வந்ததால் இரவு நேரங்களில் சாலையில் செல்வதற்கு பொது மக்கள் அச்சப்பட்டனர். குறிப் பாக, பெண்கள் மிகவும் பயந்து போய் இருந்தனர்.

பொதுமக்களின் நலன்கருதி போக்குவரத்து போலீசார், இரவு நேரங்களில் மேம்பாலங்களை இரும்பு தடுப்பு அமைத்து அடைத்தனர்.

இதனால் பைக் ரேஸ் குறைந்து பொதுமக்கள் நிம்மதி அடைந்த னர். தற்போது மீண்டும் கோயம் பேடு மேம்பாலத்தில் ஏராளமான இளைஞர்கள் பைக் ரேசில் ஈடுபட்டுள்ளனர். எனவே, இத ற்கு போலீசார் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். இவ்வாறு கூறினர்.

## அரிவாளால் சரமாரியாக வெட்டி தந்தையை கொன்ற மகன்: நெல்லையில் பயங்கரம்



அரிவாளால் தந்தையை சரமாரியாக வெட்டி கொலை செய்த மகனை போலீசார் கைது செய்தனர். தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அருகே குருவி குளம் பக்கமுள்ள மலையான் குளத்தைச் சேர்ந்தவர் செல்லையா (70). விவசாயி. இவரது மனைவி பழனியம்மாள். 3 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இவர்களுக்கு கந்தசாமி, கணேசன், முருகையா என்ற 3 மகன்களும், சண்முகத்தாய் என்ற மகளும் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகி உள்ளூரில் வசித்து வருகின்றனர்.

மூத்தமகன் கந்தசாமியுடன் செல்லையா வசித்து வந்தார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு வயலை விற்று வந்த தொகையை 3 மகன்களுக்கும், மகளுக்கும் சரி சமமாக செல்லையா பிரித்துக் கொடுத்து விட்டார்.

தனக்கு என்று ரூ. ஒரு லட்சத்து 25 ஆயிரத்தை வைத்திருந்தார்.

இந்நிலையில் செல்லையாவின் 2வது மகன் கட்டிட தொழிலாளி யான கணேசன், தான் மிகவும் சிரமத்தில் இருப்பதால் அந்த ஒரு லட்சத்து 25 ஆயிரத்தை தந்து உதவும்படி தந்தையிடம் கேட்டுள் ளார்.

ஆனால் அவர் தர மறுத்து விட்டார். இதனால் குடிப்பழக்கம் உடைய கணேசன் தினமும் குடித்து விட்டு வந்து தந்தையிடம் நிலத்தை விற்ற பணத்தை கேட்டு தகராறு செய்துள்ளார்.

நேற்றும் இந்த தகராறு நடந்தது. அப்போது கணேசன் (36), தான் வைத்திருந்த அரி வாளால் செல்லையாவை சரமாரி யாக வெட்டி விட்டு தப்பியோடி விட்டார்.

செல்லையாவின் அலறல் சத்தம் கேட்டு, அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து அவரை மீட்டு சங்கரன் கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர் இறந்தார்.

இதுகுறித்து செல்லையாவின் 3வது மகன் முருகையா, குருவி குளம் போலீசில் புகார் செய்தார்.

அதன்பேரில் போலீசார் வழ க்கு பதிந்து மலையான்குளத்தில் பதுங்கியிருந்த கணேசனை கைது செய்து, பாளை மத்திய சிறை யிலடைத்தனர்.

கணேசனுக்கு வேளாங்கன்னி என்ற மனைவியும் 4 குழந்தை களும் உள்ளனர்.

## திருச்செங்கோட்டில் வீடு புகுந்து ரூ.10 லட்சம் நகை, பணம் கொள்ளையடித்த தொழிலாளி கைது

திருச்செங்கோட்டில், வீட்டின் பூட்டை உடைத்து ரூ.10 லட்சம் மதிப்பிலான பொருட்களை கொள்ளையடித்த தறி தொழி லாளி, வாகன சோதனையின் போது போலீசாரிடம் சிக்கினார். நாமக்கல் மாவட்டம், திருச்செங் கோடு அருகே சூரியம்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் சுமதி(58). இவரது கணவர் சௌந்தரராஜன் இறந்து விட்டார். மகன், மகளுக்கு திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகின்றனர்.

கடந்த 21ம் தேதி, சுமதி வீட்டை பூட்டி விட்டு, குருசாமி பாளையத்தில் நடைபெற்ற உறவினர் வீட்டு திருமணத்திற்கு சென்றார். மறுநாள் காலை வீட்டு பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அக்கம்- பக்கத்தினர் திடுக் கிட்டனர். இதுகுறித்த புகாரின் பேரில், திருச்செங்கோடு டவுன் போலீசார் சம்பவ இடம் விரைந்து சென்று, விசாரித்தனர்.

இதில், வீட்டில் ஆட்கள் இல் லாததை நோட்டமிட்ட மர்ம நபர்கள், பூட்டை உடைத்து உள்ளே புகுந்து பீரோவில் வைத் திருந்த 10 பவுன் தங்க நகை, வெள்ளி காசுகள், வெள்ளி பொருட்கள் மற்றும் ரொக்கம் உள்பட ரூ.10 லட்சம் மதிப்பிலான பொருட்களை கொள்ளையடித் துச் சென்றது தெரியவந்தது.

இந்த கொள்ளையில் ஈடுபட்ட வர்களை பிடிக்க, போலீசார் தனிப்படை அமைத்து விசாரித்து வந்தனர். இந்நிலையில், நேற்று மதியம் 2 மணியளவில் பத்ர காளியம்மன் கோயில் பகுதியில், போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அந்த வழியாக டூவீலரில் வேகமாக வந்த ஒருவரை நிறுத்தி விசாரித்த னர். அவர் முன்னுக்கு பின் முர ணாக பதில் கூறியதால், காவல் நிலையம் அழைத்துச் சென்று கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தி



னர். இதில், அந்த நபர் சுமதி வீட்டில் கொள்ளையடித்தது தெரிய வந்தது. விசாரணையில், அவர் குமார பாளையம் அருகே ஆவத்திபாளை யம் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ண ராஜ் மகன் கணேசன்(46) என்பது தெரியவந்தது. தறித்தொழிலாளி யான கணேசன், தனது கூட் டாளியுடன் சேர்ந்து சுமதி வீட் டில் கொள்ளையடித்துள்ளார்.

கொள்ளையடித்த நகைகளை விற்பதற்காக எடுத்துச் செல்லும் வழியில், போலீசாரிடம் வசமாக சிக்கிக் கொண்டார். இதனை யடுத்து, அவரிடமிருந்து 10 பவுன் நகை, வெள்ளி பொருட்கள் மற்றும் ரூ.25 ஆயிரம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், டூவீலரும் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில், அவர் மீது ஏற்கனவே பல குற்ற வழக்குகள் இருப்பது தெரியவந் தது. இதையடுத்து, கணேசனை திருச்செங்கோடு நீதிமன்றத்தில் போலீசார் ஆஜர்படுத்தினர். நீதி பதி சுரேஷ்பாபு விசாரித்து, 15 நாள் காவலில் வைக்க உத்தரவிட் டார். அதன்படி கணேசன் சேலம் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த கொள்ளை வழக்கில், தலை மறைவான அவரது கூட்டாளியை போலீசார் தேடி வருகின்றனர்.




உள்ளாட்சி டுடே

வெளியிடுபவர் & ஆசிரியர்
R. ரவி
துணை ஆசிரியர்
M.K. முருகன், B.A., (திருச்சி)
R. பஞ்சவர்ணம் B.Sc., (சென்னை)
செய்தி ஆசிரியர்
R.D. குமார்
துணை ஆசிரியர்
M.அருள்மொழிதேவன், D.E.E., M.A.
M. பிரியா ராஜ்குமார்
கௌரவ ஆசிரியர்
ந.பா. சேதுராமன்
ஸ்பெஷல் கரஸ்பாண்டன்ட்
தாவூத் செரிப் (சென்னை)
S.A.S. பாண்டியன், (சென்னை)
சிறப்பு நிருபர்
A. ராமகிருஷ்ணன் (ராமேஸ்வரம்)
M. பாலசுப்பிரமணி B.A. (சென்னை)
தலைமை நிருபர்
கௌதம் ஜெயராம், B.Com., PGDBM.,
R. மனோஜ், B.E., (சென்னை)
M. காவியா, B.E., (சென்னை)
V. வீரமுத்து, B.B.A.,(சென்னை)
குணசேகரன், (பெரம்பலூர்)
P. பாலு, B.A., (சென்னை)
K.S. திலீப் B.Sc., (பள்ளிப்பட்டு)
பா.ரமேஷ்,
S. காந்திமதி B.Sc., (திருப்பத்தூர்)
S. சுகுமார் (சென்னை)
ஜோ. மைதிலி கோபிநாத் (சென்னை)
G. அருள்ராஜா (தூத்துக்குடி)
R.G. அதிஸ் (காஞ்சிபுரம்)
G. புவனேந்திரன், B.Com., (திருவண்ணாமலை)
E. செல்வவிநாயகம்,, B.Sc., B.Ed., LLB, (காஞ்சிபுரம்)
நிருபர்கள்
ஜெய்நுல் ஹசன், இப்ராஹிம்
G. துரை, R.கணேஷ், சுதாகர்,
T. ஆனந்தகுமார் (உடுமலைப்பேட்டை)
R. கோபால்
S. பார்த்திபன் (சென்னை)
முருகன் (ஈரோடு),
C. கிருபானந்தன் (சென்னை) (ஆன்மிகம்)
M. பார்த்திபன்,சீனியர் ஸ்போர்ட்ஸ் ரிப்போர்ட்டர்
C. முருகன், (மணலி, புதுநகர்)
G. பாண்டிகுமார், (ராமேஸ்வரம் தாலுகா நிருபர்)
B. பார்த்தசாரதி, (திருவள்ளூர்)
R. தீபா (திருவள்ளூர்)
முருகன், (நந்தியம்பாக்கம்)
V. முரளிகிருஷ்ணன் (சென்னை)
S. சக்திவேல், (திருப்பூர்)
S. காளிதாஸ், (ராமேஸ்வரம்)
கபடி சுரேஷ்
J. மலர்மன்னன் (திருவொற்றியூர்)
M. சண்முகம் (சென்னை)
ஸ்பெஷல் தலைமை புகைப்பட கலைஞர்
V. ரவிசந்திரன் (குடியாத்தம்)
புகைப்பட கலைஞர்
A. ராஜா B.Com., (சென்னை)
S. கண்ணன் (கொருக்குப்பேட்டை)
C. லீலாகுமார் B.Com., (சென்னை)
P. செல்வகுமார், (திருச்சி)
வடிவமைப்பு
Kala Graphics, Ch. - 600081.
சிறப்பு சட்ட ஆலோசகர்
R.சரவண அரவிந்த், B.A., M.L.,
சட்ட ஆலோசகர்
K. கோகுல்ராம், M.Com., M.Phil., M.L.,
J. அன்புராஜன், B.Com., B.L.,
P.ராஜா M.Sc., M.L., (வழக்கறிஞர்)
N. வெங்கட்ராமன், M.Com., M.Phil., B.Ed., B.L.,
D. கோபிநாதன் M.A., B.L.,
S. தாமஸ் M.A., L.L.B, (மூத்த வழக்கறிஞர்)
M. குணசீலன் B.Com., M.L.,
S. ஓம்சிவகுமார் B.A., B.L.,
ஐயப்பன் B.Sc., B.L.,
R. மதன்குமார், B.A., LLB.,

## காமராஜர் துறைமுகத்தின் சமூக பொறுப்பு நிதி (CSR) மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம்



திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு -11 பூங்காவனம் நகரில் (மண்டல அலுவலகம்) காமராஜர் துறைமுகத்தின் சமூக பொறுப்பு நிதி (CSR) மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மண்டலக் குழுத் தலைவரும், திருவொற்றியூர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளருமான தி.மு.தனியரசு ஙிஸீ ஆகியோர் முன்னிலையில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்கள் அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் ,திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன், வட்டக் கழகச் செயலாளர்கள் திரு.குறுத்து முனுசாமி,எஸ்.தமிழ்ச்செல்வன், மாமன்ற உறுப்பினர் திருமதி. சரண்யா கலைவாணன்,தமிழரசன் என்கிற தம்பையா, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் சமூக பாதுகாப்பு நிதி துறையின் பொது மேலாளர் திரு. கலைவாணன், மண்டல அலுவலர் மற்றும் கழக நிர்வாகிகள் குறிஞ்சி எஸ் கணேசன்,வழக்கறிஞர் சந்திரபோஸ், ஆர் சி ஆசைத்தம்பி எம்.வி.குமார் கே. பிரபாவதி, இரா. குமரேசன்,பி.எஸ்.சைலஸ்,ஒய். நந்திவர்மன் முருகா எஸ்.ஆறுமுகம்,இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். டி..மதன்குமார், பா.பாலஉமாபதி,டி.பி.பாலசுந்தரம், உடனிருந்தனர்.



இராமேஸ்வரம் நாம் தமிழர் கட்சி சார்பில் 04/06/25 ந் தேதி அன்று புதிய பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம் மற்றும் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. அதில் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் போதுமான அரசு மருத்துவர்கள் இல்லாததை கண்டித்தும், கழிவு நீர் கடலில் கலப்பதை தடுத்து பாதாள சாக்கடை திட்டத்தை செயல்படுத்த கோரியும், இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயிலில் உள்ளூர் மக்களின் வழிபாட்டு உரிமைகளை பாதுகாக்க கோரியும், இராமேஸ்வரத்தில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களிலும் உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு ஏற்ப நம் தாய் மொழியாம் தமிழில் பெயர் பலகை வைக்க வலியுறுத்த கோரியும் மாபெரும் கண்டனஆர்ப்பாட்டம் வருகின்ற (12/06/25)ஆம் தேதி அன்று நடத்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில் மாநில இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் திரு.மா.நம்புராஜன் , மாநில சுற்றுச்சூழல் பாசறை துணைச் செயலாளர் க. மணிராஜன், மாநில மாணவர் பாசறை ஒருங்கிணைப்பாளர் திரு.பா.தம்பாசெல்வம் ,மாவட்டச் செயலாளர் திரு வை.செந்தில் குமார், மாவட்டத் தலைவர் நா.மாரிமுத்து, பொருளாளர் சு.லட்சுமி நாராயணன் ,ஜெ.சந்தான சதீஷ் ராஜா, செய்தி தொடர்பாளர் இரா.பாலரசு, ரா.தினேஷ் குமார்,வணிக பாசறை பொறுப்பாளர் மு.சண்முகராஜன், தகவல் தொழில்நுட்ப பொறுப்பாளர் ர.ரூபின்சன், கலை இலக்கிய பண்பாட்டு பாசறை செயலாளர் க.பொன் விக்னேஷ், இணைச் செயலாளர் ச.மனோஜ் குமார், தொழிற்சங்க பேரவை பொறுப்பாளர் பா.மணிகண்டன், வீரத்தமிழர் முன்னணி இணைச்செயலாளர் மா.ஜெகதீஷ் குமார், நிருபர் க.பாண்டிக்குமார் , கு.அருண்குமார் மற்றும் மூத்த முக்கிய பொறுப்பாளர்கள் நா.வெற்றி , நம்பு.மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர்...

- G.பாண்டிகுமார் நிருபர்,இராமேஸ்வரம்



சமூக வலைதளத்தில் தற்போது வைரலாகும் ஒரு வீடியோ மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதாவது வாலிபன் ஒருவன் ஐஸ்கிரீம்களை கவரில் பேக் செய்து கொண்டிருக்கிறான். அவர் குச்சி ஐஸ்களை கவரில் பேக் செய்து கொண்டிருந்தபோது ஒவ்வொரு ஐஸ்கிரீமையாக வாயில் வைத்து ருசித்து விட்டு பேக் செய்கிறான்.ஒரு கூடையில் ஐஸ்கிரீம்களை வைத்துவிட்டு மற்றொரு கூடையில் அதனை பேக் செய்து போடுகிறான். அவன் ஒவ்வொரு ஐஸ்கிரீமையும் பேக் செய்யும் போது ருசித்துவிட்டு பேக் செய்கிறான். இந்த வீடியோ எங்கு எப்போது எந்த இடத்தில் எடுக்கப்பட்டது என்ற விவரங்கள் சரிவர தெரியவில்லை. மேலும் இந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வரும் நிலையில் பலரும் தங்கள் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.



ஜுலையில் மக்கள் சந்திப்பு பயணம் தொடங்க விஜய் திட்டம். 42 நாட்கள் தொடர் மக்கள் சந்திப்பில் விஜய் ஈடுபட இருக்கிறார். மக்கள் சந்திப்பு தொடர்பாக மாவட்ட செயலாளர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்களை கட்சி மேலிடம் வழங்கியுள்ளது.

## வரும் 17 அன்று ராமேஸ்வரம் அனைத்து பொதுமக்களும் சேர்ந்து ஆலய பிரவேச போராட்டம்








உள்ளூர் பக்தர்களின் வழிபாட்டு உரிமையை பாதுகாக்க ராமேஸ்வரம் கோவிலில் வருகிற 17-ஆம் தேதி போராட்டம் நடத்த முடிவு ராமேஸ்வரம் ராமநாதசாமி கோவிலில் சாமி தரிசனம் செய்ய வரும் உள்ளூர் பக்தர்கள் வழக்கமாக விசுவநாதர் சன்னதி எதிரே உள்ள சிறப்பு தரிசன பாதை வழியாக அனுமதிக்கப்பட்டனர் ஆனால் கடந்த சில வாரங்களாக உள்ளூர் பக்தர்கள் அந்தப் பாதை வழியாக தரிசனம் செய்ய கோவில் நிர்வாகம் தடை விதித்தது கோவில் நிர்வாகத்தின் நடவடிக்கையை கண்டித்து மக்கள் நலப் பேரவை சார்பில் வரும் 17ஆம் தேதி அன்று ஆலய பிரவேச போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர் இதனிடையே ராமேஸ்வரம் தாலுகா அலுவலகத்தில் வருவாய் கோட்டாட்சியாளர் தலைமையில் இதுகுறித்து சமாதான பேச்சுவார்த்தை கூட்டம் நடைபெற்றது இதில் கோயில் இணை ஆணையாளர் துணை சூப்ரண்ட் மற்றும் மக்கள் நலர் பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இது சம்பந்தமாக பேச்சுவார்த்தை கூட்டம் தோல்வியில் முடிந்தது இதனால் வரும் 17 ஆம் தேதி அன்று மக்கள் நல பேரவை சார்பில் ராமேஸ்வரம் அனைத்து பொதுமக்களும் சேர்ந்து கோயிலுக்குள் ஆலய பிரவேச போராட்டம் நடத்த திட்டமிட்டு உள்ளனர்.

## சென்னை தொழிலதிபர் மனைவியுடன் நெருக்கம்; ஆபாச புகைப்படங்களை காட்டி பணம் பறிப்பு: கோவை வாலிபருக்கு வலை



சென்னை தொழிலதிபர் மனைவியுடன் நெருக்கமாக இருந்த ஆபாச புகைப்படங்களை காட்டி பணம் பறித்ததோடு, சென்னை தொழிலதிபருக்கு கொலை மிரட்டல் விடுத்த கோவை வாலிபரை போலீசார் தேடி வருகின்றனர். சென்னை மதுரவாயல் பகுதியைச் சேர்ந்தவர் 45 வயது தொழிலதிபர். இவரது மனைவி மற்றும் பிள்ளைகள் கோவையில் வசித்து வருகின்றனர். ஒவ்வொரு வாரமும் இவர் தனது மனைவி, பிள்ளைகளை பார்க்க கோவை வந்து செல்வது வழக்கம். இந்த நிலையில் இவரது செல்போன் எண்ணுக்கு ஆப் மூலம் கடந்த மாதம் அழைப்பு ஒன்று வந்துள்ளது. அதில் பேசிய மர்ம நபர், தொழிலதிபர் தனது மனைவி, பிள்ளைகளை பார்க்க கோவைக்கு வரக்கூடாது என்றும், வந்தால் கொலை செய்து விடுவேன் என்றும் மிரட்டல் விடுத்துள்ளார். மேலும் சென்னைக்கு வந்து கொலை செய்து விடவும் தயங்க மாட்டேன் என்றும் அந்த நபர் மிரட்டியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த தொழிலதிபர் அழைப்பு வந்த எண் குறித்து விசாரணை நடத்தினார். அதில் ஆப் மூலம் அழைப்பு விடுத்து மிரட்டியது கோவை ரத்தினபுரியை சேர்ந்த ஸ்வீட்சன் என்ற வாலிபர் என்பது தெரிய வந்தது. இது குறித்து தொழிலதிபர் சென்னை போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் நாராயணன் என்ற பெயரில் சிம் கார்டு எடுக்கப்பட்டு அந்த சிம் கார்டை ஸ்வீட்சன் பயன்படுத்தி தொழிலதிபரை மிரட்டியது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து சென்னை தனிப்படை போலீசார் ரத்தினபுரியில் உள்ள ஸ்வீட்சன் வீட்டிற்கு வந்து அவரை கைது செய்ய முயன்றனர். அப்போது போலீசாரை பார்த்த ஸ்வீட்சன் வீட்டின் ஜன்னல் கண்ணாடியை உடைத்து தப்பிச் சென்றார். போலீசார் நடத்திய தொடர் விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது.

இது குறித்து போலீசார் கூறியதாவது: கோவை ரத்தினபுரியைச் சேர்ந்த ஸ்வீட்சன் சரவணம்பட்டி பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் இசை பிரிவில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். அவர் சிங்காநல்லூரில்உள்ளஒருநிறுவனத்தில் பணிபுரியும்போது சென்னை தொழிலதிபரின் மனைவியும், அந்த நிறுவனத்தின் உரிமையாளர் மகளுடனும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. அந்தப் பழக்கத்தை பயன்படுத்தி ஸ்வீட்சன் தொழிலதிபர் மனைவியுடன் நெருக்கமாக புகைப்படங்களை எடுத்துள்ளார். அந்த ஆபாச புகைப்படங்களை காட்டி ஸ்வீட்சன் பணம், நகைகளை மிரட்டி வாங்கியுள்ளார். இது குறித்து தகவல் அறிந்த தொழிலதிபரின் மனைவியின் தந்தை, ஸ்வீட்சனை கண்டித்தார்.

அதன் பின்னர் சிறிது நாட்கள் கழித்து ஸ்வீட்சன் மீண்டும் தொழிலதிபர் மனைவியை தொடர்பு கொண்டு தனது காதல் வலையை வீசியுள்ளார்.

இதேபோல ஸ்வீட்சன் பல பெண்களிடம் குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்ட தொழிலதிபர்களின் மனைவிகளை குறிவைத்து பழகி மிரட்டி பணம், நகைகளை பறித்து வந்துள்ளார். மேலும், ஸ்வீட்சன் தனது சகோதரி திருமணத்திற்காக சிங்காநல்லூர் நிறுவன உரிமையாளரிடம் நகை, பணத்தை மிரட்டி வாங்கி இனி மேல் உங்களது மகள் விஷயத்தில் தலையிடமாட்டேன் என கூறியுள்ளார். தொழிலதிபர்களின் மனைவியை குறிவைத்து பழகும் ஸ்வீட்சன்னுக்கு அவரது குடும்பத்தாரே உதவி செய்து வந்துள்ளனர். உல்லாச வாழ்க்கைக்கு ஸ்வீட்சன் பல பெண்களிடம் பேசி பழகி வந்துள்ளார். அவரது மனைவியும் அவருக்கு உடந்தையாக இருந்ததாக தெரிகிறது. இரவு நேரங்களில் தனது மனைவி இருக்கும்போதே அவர் பல பெண்களிடம் வீடியோ கால்களில் பேசி போட்டோ எடுத்து வைத்துள்ளார். அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஸ்வீட்சன்னின் மனைவி மற்றும் குடும்பத்தினரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். இவ்வாறு போலீசார் தெரிவித்தனர். இதேபோல ஸ்வீட்சன் பல பெண்களிடம் குறிப்பாக 40 வயதுக்கு மேற்பட்ட தொழிலதிபர்களின் மனைவிகளை குறிவைத்து பழகி மிரட்டி பணம், நகைகளை பறித்து வந்துள்ளார். இதற்கு அவரது மனைவி மற்றும் குடும்பத்தினர் உடந்தையாக இருந்துள்ளனர்.

## சேலத்தில் துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்ட கொள்ளையன்: மேலும் ஒருவரை கொன்றது அம்பலம்



சேலத்தில் துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்ட கொள்ளையன் மேலும் ஒருவரை கொன்றது அம்பலமாகியுள்ளது. சேலம் மாவட்டம் ஓமலூர் அருகேயுள்ள காடையாம்பட்டி உப்புபள்ளத்துக்காடு கிராமத்தை சேர்ந்தவர் ஜனகராஜ் மனைவி சரஸ்வதி (60). இவர், கடந்த 20ம் தேதி வனத்தை ஒட்டிய தோட்டத்தில் காது, மூக்கு அறுக்கப்பட்ட நிலையில் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இக்கொலையில் ஈடுபட்டது, ஓமலூர் கட்டிக்காரனூரை சேர்ந்த பிரபல ரவுடியான நரேஷ்குமார் (32) எனத்தெரியவந்தது. இவர், சேலம், கிருஷ்ணகிரி, விருதுநகர், திருப்பூர் என மாநிலத்தின் பல்வேறு இடங்களில் தனியாக இருக்கும் மூதாட்டிகளை தாக்கி நகை, பணத்தை கொள்ளையடித்து வந்தது தெரிய வந்தது.

கடந்த 10 நாட்களுக்கு முன் சங்ககிரி, மகுடஞ்சாவடியில் 2 மூதாட்டிகளை தாக்கி நகையை பறித்து சென்றிருப்பதையும் போலீசார் கண்டறிந்தனர்.

இதையடுத்து அவரை தீவிரமாக போலீசார் தேடியநிலையில், நேற்று முன்தினம் அதிகாலை சங்ககிரி மலைக்கோட்டை மலையடிவாரத்தில் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், மகுடஞ்சாவடி இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் தலைமையிலான போலீசார் சென்று சுற்றி வளைத்தனர். அப்போது எஸ்ஐ விஜயராகவன், போலீஸ்காரர் செல்வகுமாரை அரிவாளால் வெட்டி விட்டு தப்பியோட முயன்றவரை இன்ஸ்பெக்டர் துப்பாக்கியால் சுட்டார். அதில், கொள்ளையன் நரேஷ்குமாரின் வலது காலில் குண்டு பாய்ந்து, கீழே விழுந்தார். உடனே அவரை மீட்டு சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

போலீசாரால் சுட்டு பிடிக்கப்பட்ட கொள்ளையன் நரேஷ்குமார் மீது 21 வழக்குகள் நிலுவையில் உள்ளது. மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் தோட்டங்களிலும், வீடுகளிலும் தனியாக இருக்கும் மூதாட்டிகளை கொடூரமாக தாக்கி நகை, பணத்தை பறித்து செல்வதை வாடிக்கையாக கொண்டுள்ளார் என்பதை போலீசார் கண்டறிந்துள்ளனர். அதனால், மற்ற மாவட்டங்களில் இவர் மீதுள்ள வழக்குகளில், கைது நடவடிக்கை எடுக்க போலீசார் முடிவு செய்துள்ளனர்.

இதனிடையே நேற்று, கர்நாடகா மாநிலம் அத்திப்பள்ளி போலீசார் சேலம் வந்து, கொள்ளையன் நரேஷ்குமாரிடம் விசாரித்துள்ளனர்.

கடந்த 9ம் தேதி தமிழ்நாடு-கர்நாடகா மாநில எல்லையில் உள்ள அத்திப்பள்ளியில் 60 வயது முதியவரை கொடூரமாக தாக்கி கொலை செய்துவிட்டு, அவரிடம் இருந்த செல்போன், ரூ.20 ஆயிரம் பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு நரேஷ்குமார் தப்பி வந்துள்ளார் என்ற பகீர் தகவல் கிடைத்துள்ளது. அந்த கொலை மற்றும் கொள்?ள தொடர்பாக சேலம் மாவட்ட போலீசாரிடமும், கொள்ளையனிடமும் அத்திப்பள்ளி போலீஸ் அதிகாரிகள் விசாரித்துள்ளனர். இந்த வழக்கில், அவரை கைது செய்ய மேல் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் கொள்ளையன் நரேஷ்குமாரை நேற்று, சேலம் மாவட்ட போலீசார் 2 வழக்குகளில் பார்மல் அரஸ்ட் செய்தனர். மகுடஞ்சாவடியில் கடந்த 3ம் தேதி மூதாட்டி ராசம்மாளை தாக்கி அவரிடம் இருந்து மோதிரத்தை பறித்து சென்ற வழக்கில் கைது செய்துள்ளனர். அதேபோல், நேற்று முன்தினம் சங்ககிரி மலையடிவாரத்தில் போலீசார் சுற்றி வளைத்து பிடிக்க முயன்ற போது, எஸ்ஐ, போலீஸ்காரரை அரிவாளால் வெட்டி கொலை செய்ய முயன்ற வழக்கில் சங்ககிரி போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

"ULLATCHI TODAY" owner and Published : R. Ravi, No. 35/63, Cheriyan Nagar, 3rd Street, New Washermenpet, Chennai - 600 081. and Printed by him at CHENNAI OFFSET PRINTERS, No. 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. E-mail: ullatchitoday@yahoo.com, Cell : 9003837900, Editor : R. RAVI